# சிந்திக்கவும்

## SGS நேர்மை விதித்தொகுப்பு

**அன்பார்ந்த சக ஊழியர்களுக்கு,**

நேர்மை என்பது SGS –இன் இதயமாக இருக்கிறது. நமது வாடிக்கையாளர்களிடத்திலும் பங்குதாரர்களிடத்திலும் நாம் ஊக்குவிக்கின்ற நம்பிக்கை ஒரு நிறுவனமாகவும் தனிநபர்களாகவும் நமது வெற்றிக்கு முக்கியமாக விளங்குகிறது.

நமது துறையின் முன்னணி நிறுவனமாக, தொழில்முறை நடத்தையின் மிக உயர்ந்த தரத்தை நாம் கடைப்பிடிக்கிறோம். நமது நேர்மை விதித்தொகுப்பு என்பது SGS, அதன் பல்வேறு வணிகங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் முழுவதும் பகிர்ந்துகொள்ளப்படுகின்ற மதிப்புகளின் வெளிப்பாடு ஆகும்.

நமது இலக்குகளை அடைவதற்காக, தலைமைத்துவம், நியாயம் மற்றும் நேர்மையுடன் தாங்கள் பணிபுரிவது பற்றி மிகவும் ஆர்வமுடன் இருக்கின்ற ஊழியர்களை ஈர்த்து தக்கவைத்துக் கொள்வது நம்முடைய நோக்கமாக இருக்கிறது. நமது நேர்மை சார்ந்த கொள்கைகளை உறுதியாகக் கடைப்பிடிப்பதற்கு நம் ஒவ்வொருவருக்கும் மற்றும் நமது வாடிக்கையாளர்களுக்கும் பொறுப்பு இருப்பதை நாம் உணர்ந்துகொள்கிறோம்.

நாம் SGS பிராண்டு மற்றும் நற்பெயரின் பாதுகாவலர்களாக இருக்கிறோம், மேலும் சந்தைப்பகுதியில் அவை குறிப்பிடுகின்ற மதிப்புகளுக்குப் பாதுகாப்பளிக்க நாம் தொடர்ந்து போராடுகின்றோம். நமது வணிகத்தை நேர்மையாகவும் வெளிப்படையாகவும் நடத்துவதன் மூலம் நாம் இந்த நோக்கத்தை அடைகிறோம்.

இந்த உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, நாம் பழிவாங்கப்படுவோம் என்ற பயம் இல்லாமல் நம் யோசனைகளையும் தகவல்களையும் பகிர்ந்துகொள்ள முடிகின்ற, ஆலோசனை பெறுகின்ற மற்றும் பிரச்சனைகளை எழுப்புகின்ற ஒரு வெளிப்படையான கலாச்சாரத்தை நாங்கள் ஊக்குவிக்கிறோம்.

இது நாம் செயல்படத் தேர்ந்தெடுக்கின்ற சந்தைகளில் நமது வாடிக்கையாளர்களின் நலன்களுக்குச் சேவை செய்ய நமக்கு உதவுகிறது, நமது ஊழியர்களுக்கு வாய்ப்புகள் வழங்குகிறது மற்றும் நமது பங்குதாரர்களுக்கு நிலையான நிதி வருவாய்களை

P. Kalantzis

**PETER KALANTZIS**
Chairman of the Board

**FRANKIE NG**
Chief Executive Officer

SGS ஆனது உலகின் முன்னணி ஆய்வு, சரிபார்ப்பு, சோதனை மற்றும் சான்றளிப்பு நிறுவனம் ஆகும். தானிய ஏற்றுமதிகளை ஆய்வு செய்வதற்காக வாங்குபவர்களும் விற்பவர்களும் ஒரு சுயாதீனமான, நேர்மையான மற்றும் நம்பகமான மூன்றாம் தரப்பைச் சார்ந்திருக்க வேண்டிய தேவையைப் போக்குவதற்காக 1878 ஆம் ஆண்டு இது தொடங்கப்பட்டது. இன்று, SGS வளர்ந்துள்ளதோடு புதிய நிபுணத்துவப் பகுதிக்குள் நுழைந்துள்ளதால், அது வர்த்தகர்கள், தயாரிப்பாளர்கள், நுகர்வோர் மற்றும் அரசாங்கங்கள் ஆகியோரால் ஒரே மாதிரி சார்ந்திருக்கின்ற ஒரு சுயாதீனமான மற்றும் நிபுணத்துவமிக்க மூன்றாம் தரப்பின் பங்கினை நிறைவேற்றுவதைத் தொடர்கிறது.

SGS இன் வெற்றி வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், பங்குதாரர்களிடமிருந்தும், மற்றும் அது வணிகம் நடத்துகின்ற சமுதாயங்களிலிருந்தும் அது நாளுக்கு நாள் சம்பாதிக்கின்ற நம்பிக்கையைச் சார்ந்துள்ளது.

இந்த நம்பிக்கை SGS ஊழியர்களின் பல தலைமுறையினரின் ஒட்டுமொத்த முயற்சிகளின் வாயிலாகப் பெறப்பட்டுள்ளது. இந்த நேர்மை விதித்தொகுப்பை பயனுள்ள முறையில் நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக SGS இந்த நம்பிக்கையைப் பராமரிப்பதில் கவனம் செலுத்துகிறது.

### விதித்தொகுப்பின் பயன்பாடு

இந்த விதித்தொகுப்பு SGS மற்றும் அதன் இணை நிறுவனங்களின் அனைத்துப் ஊழியர்கள், அதிகாரிகள் மற்றும் இயக்குநர்களுக்கும் பொருந்துகிறது. SGS ஊழியர்களுக்கு குறிப்பாக தொடர்புடையதாக அல்லாத விதித்தொகுப்பின் அனைத்து அம்சங்களும், ஒப்பந்ததாரர்கள், ஆலோசகர்கள், தொழில் சுதந்திரமுள்ளோர், கூட்டு வணிகப் பங்காளர்கள், முகவர்கள், துணை ஒப்பந்ததாரர்கள் மற்றும் SGS சார்பாகச் செயல்படுகின்றவர்கள் அல்லது பிரதிநிதியாகச் செயலாற்றுபவர்கள் ஆகியோரால் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

### விதித்தொகுப்பைப் புரிந்துகொள்ளுதல்

விதித்தொகுப்பைப் படித்துப்பார்த்துப் புரிந்துகொள்வதும் அதன் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதற்கு உறுதியேற்பதும் ஒவ்வொரு SGS ஊழியரின் தனிப்பட்ட பொறுப்பாகும்.

ஊழியர்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நடைபெறும் SGS நேர்மைப் பயிற்சியில் பங்கேற்க வேண்டும். ஒரு மேலாண்மைப் பொறுப்பில் இருக்கும் ஊழியர்கள் அவர்களுக்கு அறிக்கையளிக்கும் மற்ற அனைத்து ஊழியர்களும் முறையாகப் பயிற்சியளிக்கப்பட்டிருப்பதையும், விதித்தொகுப்பை முழுமையாகப் புரிந்துகொண்டு அதற்கு இணங்கி நடக்க முடிவதையும் உறுதிசெய்ய வேண்டும்.

### வழிகாட்டலைக் கோருதல்

நேர்மைப் பிரச்சனைகள் மற்றும் தொழில் நெறிமுறைகள் எழுப்பப்பட்டு வெளிப்படையாக விவாதிக்கப்படுகின்ற ஒரு கலாச்சாரத்தை ஏற்படுத்துவதற்கு SGS உறுதியளித்துள்ளது. விதித்தொகுப்பை ஊழியர்கள் புரிந்துகொள்ள உதவுவதற்கும், ஒரு நன்னெறி சார்ந்த தர்மசங்கடமான நிலையை எதிர்கொள்ளும்போது சரியான முடிவெடுக்க அவர்களுக்கு உதவுவதற்கும் வழிகாட்டுதலும் ஆதரவும் கிடைக்கிறது.

### நேர்மையான புகார்களுக்கு பழிவாங்கும் நடவடிக்கை இல்லை

ஏதேனும் பிரச்சனைகளைப் பற்றி அல்லது விதித்தொகுப்பு மீறப்படுகின்றது என்ற சந்தேகம் பற்றி வெளிப்படையாகப் பேசுமாறும் புகாரளிக்குமாறும் ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஆலோசனை கோரியதற்காகவோ அல்லது ஒரு நடத்தை விதி மீறல் பற்றித் தெரிவிப்பதற்காகவோ யாரும் எந்த விதமான பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கோ அல்லது பாதக விளைவுகளுக்கோ ஆளாகவில்லை என்பதை SGS உறுதிசெய்ய வேண்டும்.

நேர்மையான முறையில் விதிமீறல் பற்றி புகாரளித்த ஒரு ஊழியருக்கு எதிராக பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

# நேர்மைக் கலாச்சாரம்

SGS நேர்மைக் கொள்கைகள்

- **நம்பிக்கை:** இது நமது ஒரேயொரு மதிப்புமிக்க சொத்தாகும், நமது பிராண்டு மற்றும் நற்பெயரின் அடித்தளம் ஆகும். வாடிக்கையாளர்கள் நமது நேர்மையைப் பெரிதும் நம்பியிருக்கிறார்கள், இந்த நம்பிக்கையை நாம் ஒவ்வொரு நாளும் பேணிப் பாதுகாக்க வேண்டும். கனப்பொழுதில் இதற்கு இடர்ப்பாடு ஏற்படலாம்.
- **உண்மையும் வெளிப்படைத்தன்மையும்:** நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலிலும், நாம் நமக்கும், நமது வாடிக்கையாளர்களுக்கும், நம்முடன் பணிபுரிவர்களுக்கும் உண்மையானவராக நடந்துகொள்ள வேண்டும். பொய், ஏமாற்றுவேலை அல்லது நேர்மையின்மை ஆகியவற்றை எந்தச் சூழ்நிலையிலும் நியாயப்படுத்த முடியாது.
- **பொறுப்புடைமை:** நமது செயல்பாடுகள் மற்றும் புறக்கணிப்புகள் ஒவ்வொன்றுக்கும் நாம் அதற்குரிய விளைவுகளை அனுபவித்தாக வேண்டும். நமது தெரிவுகளின் விளைவுகளை நாம் ஏற்றுக்கொள்கிறோம், நமது செயல்களுக்காக மற்றவர்களைக் குற்றம் சொல்வதில்லை.
- **கோட்பாடுகள்:** நீதிநெறி தவறாமலும், நியாயமாகவும் நடந்துகொள்வதிலும், மற்றவர்களுக்கு மரியாதையளிப்பதிலும் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். நமது முடிவுகள் தன்னிச்சையான தெரிவுகள் அல்லது தனிப்பட்ட முன்னுரிமைகளால் எடுக்கப்படுவதில்லை, மாறாக அவை கொள்கைகள் மற்றும் சிறந்த நடத்தைத் தரங்களைப் பின்பற்றி எடுக்கப்படுகின்றன.

**சரியான கேள்விகளை உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்**

- குறிப்பிட்ட நடவடிக்கை சட்டவிரோதமானதாகவோ அல்லது நன்னெறி சாராததாகவோ இருக்கலாம் என நான் சந்தேகிக்கிறேனா?
- இந்த முடிவு ஒரு செய்தித்தாளில் தெரிவிக்கப்பட்டாலோ, அல்லது நான் இதைப் பற்றி எனது குடும்பத்தினர்களிடமும் நண்பர்களிடமும் பேசினாலோ இது எப்படி தோன்றும்?
- இந்த உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கை பொய் சொல்லுவது அல்லது உண்மையில்லாமல் நடந்துகொள்வதை உள்ளடக்குகிறதா?
- உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கை தனிப்பட்ட பாதுகாப்புக்கு அல்லது மற்றவர்களின் உடல்நலத்துக்கு ஊறு விளைவிப்பதாக இருக்குமா?
- உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கை SGS அல்லது அதன் நற்பெயருக்கு சேதம் ஏற்படுத்துவதாக இருக்குமா?
- பரிவர்த்தனை ஒரு முறையான வணிக நோக்கத்தைக் கொண்டிருக்கிறதா?

உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கை இந்தச் சோதனைகளில் ஏதாவது ஒன்றில் தோல்வியுற்றால், நீங்கள் ஆலோசனை கேட்டுப்பெற்று உங்களுடைய முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும்.

**விதிமீறல்கள் சகித்துக்கொள்ளப்பட மாட்டாது**

எந்த ஒரு விதிமீறலும், அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும், SGS –ன் நற்பெயருக்கும் பிராண்டுக்கும் தீங்கு ஏற்படுத்தக்கூடும் என்பதால் அது சகித்துக்கொள்ளப்படுவதில்லை. விதிமீறலில் ஈடுபட்டால், வேலை நீக்கம் மற்றும் கடுமையான விதிமீறல்களுக்கு குற்றவியல் வழக்கு போன்றவை உள்ளிட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

# வழிகாட்டல் கோருதல் அல்லது ஒரு பிரச்சனையைத் தெரிவித்தல்

குறிப்பிட்ட சூழ்நிலைகளில் விதித்தொகுப்பின் பொருள் அல்லது அதன் பயன்பாடு பற்றிய சந்தேகம் எழும்போது, ஊழியர்கள் இதைப் பற்றி அவர்களுடைய மேற்பார்வையாளர் அல்லது மேலாளர், மனித வளங்கள் துறை அல்லது SGS சட்டத் துறையுடன் விவாதிக்க வேண்டும். SGS சட்டப் பிரிவின் தொடர்பு விவரங்களை இன்ட்ராநெட்டில் நாம் காணலாம். இந்த விதித்தொகுப்பு தொடர்பான எந்த விஷயங்கள் குறித்தும் ஊழியர்கள் அகத் தணிக்கையாளர்களுடன் விவாதிக்கலாம்.

ஒரு ஊழியர் ஒரு பிரச்சனையை தன்னுடைய வரிசை மேலாளரிடம் தெரிவிக்க முடியவில்லை என்றாலோ அல்லது அது பொருத்தமானதாக இல்லாவிட்டாலோ, எப்பொழுதும் SGS தலைமை இணக்க அதிகாரியைத் தொடர்புகொள்ள வேண்டும். ஊழியர்களுக்கு விதிமீறல் பற்றித் தெரியவந்தாலோ அல்லது விதிமீறல் ஏற்படக்கூடும் எனச் சந்தேகித்தாலோ அதைப் பற்றி அவர்கள் SGS தலைமை இணக்க அதிகாரியிடம் தகவல் தெரிவிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நடத்தை விதித்தொகுப்பு தொடர்பான விஷயங்களுக்காக தற்போதைய மற்றும் முன்னாள் SGS ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் அல்லது சப்ளையர்கள், அல்லது மூன்றாம் தரப்பு ஆகியோர் SGS தலைமை இணக்க அதிகாரியை பின்வரும் வழிகளில் ஏதாவது ஒன்றின் மூலமாகத் தொடர்புகொள்ளலாம்:

- அஞ்சல் மூலம்: SGS SA / தலைமை இணக்க அதிகாரியின் கவனத்துக்கு / 1 place des Alpes, P.O. Box 2152, CH – 1211 Geneva 1
- integrityhelpline.sgs.com
- தொலைபேசி அல்லது தொலைநகல்:
  தொலைபேசி +41 (0)22 739 91 00
  தொலைநகல் +41 (0)22 739 98 81 (ஜெனீவாவில் கடைப்பிடிக்கப்படும் வேலை நேரத்தின்போது அழைப்புக்கு பதிலளிக்கப்படும்)
- SGS நேர்மை உதவித் தொலைபேசி எண்: +1 800 461-9330 (கட்டணமில்லாத் தொலைபேசி எண் / தொலைபேசி எல்லா நாட்களிலும், 24 மணிநேரமும் செயல்பாட்டில் இருக்கும்)

SGS நேர்மை உதவித்தொலைபேசி எண் இணக்கம் மற்றும் நன்னெறி தொடர்பான பிரச்சனைகளைக் கையாளுவதில் நிபுணத்துவம் பெற்றுள்ள சுயாதீன சேவை வழங்குநர்களால் இயக்கப்படுகின்றது. பெரும்பாலான நிகழ்வுகளில், SGS நேர்மை உதவித்தொலைபேசி எண்ணை அழைக்கின்ற நபர் ஒரு ஆபரேட்டரிடம் பேசி அவர்களுடைய மொழியில் பின்னூட்டத்தைப் பெற முடியும். நேர்மை உதவித்தொலைபேசி எண்ணுக்கு அழைக்கப்படும் தொடர்புகள் இரகசியமாக வைத்துக்கொள்ளப்படும். தேவைப்படும்போது, தகவல் கொடுப்பவரின் பெயரைத் தெரிவிக்காமல் அதைப் பாதுகாக்கின்ற SGS தலைமை இணக்க அதிகாரிக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

நேர்மை விதித்தொகுப்பு தொடர்பாக SGS தலைமை இணக்க அதிகாரி, மனிதவள மேலாளர், அகத் தணிக்கையாளர் அல்லது SGS நிறுவன வழக்கறிஞர் ஆகியோர் தொடர்புகொள்ளப்படும்போது, வழங்கப்படும் தகவல் இரகசியமாக வைத்துக்கொள்ளப்படும் மற்றும் எழுப்பப்படுகின்ற பிரச்சனைக்கு பதிலளிப்பதற்கு அல்லது அதற்குத் தீர்வு காண்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. தகவல் தெரிவிக்கும் நபர்கள் அவர்களுடைய பெயரையும் தொடர்பு விவரங்களையும் தெரிவிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள், ஆனால் அவர்கள் தங்களுடைய அடையாளத்தை இரகசியமாக வைத்துக்கொள்வதற்கும் தேர்ந்தெடுக்கலாம். இந்த நிகழ்வில், அழைப்பவர் தன்னுடைய அடையாளத்தை பகிரங்கப்படுத்தாமல் பின்னூட்டத்தைப் பெற அனுமதிக்கும் விதமாக பொருத்தமான தகவல்தொடர்பு வழிகள் வடிவமைக்கப்படலாம்.

SGS தலைமை இணக்க அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டுவரப்படுகின்ற நேர்மை விதிமீறல்கள் குறித்த சந்தேகங்கள் பற்றி நியாயமாக விசாரணை நடத்தப்படுகின்றது. பொருத்தமான போது, விசாரணையின் முடிவு குறித்த பின்னூட்டம் புகார் தெரிவிக்கின்ற அல்லது தகவல் தெரிவிக்கின்ற நபருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

# சேவைகளின் நேர்மை

அனைத்து சேவைகளும் ஒப்புக்கொள்ளப்பட்ட தரங்கள், முறைகள் மற்றும் கொள்கைகளுக்கிணங்க தொழில்ரீதியாகவும் நேர்மையாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

SGS தனது தீர்ப்பின் சுயாதீனத்தன்மையைப் பராமரிக்கிறது மற்றும் அது கண்டுபிடித்த தகவல்களைத் திரித்துக் கூறுவதற்காக அல்லது அதன் ஆய்வுகள், சான்றளிப்புகள், தணிக்கைகள் அல்லது சோதனைகள் ஆகியவற்றின் முடிவுகளை மாற்றுவதற்காக அழுத்தம் கொடுப்பதோ அல்லது தூண்டுவதோ இல்லை. கண்டுபிடித்த தகவல்கள் அனைத்தும் போதுமான அளவுக்கு ஆவணப்படுத்தப்பட வேண்டும் மற்றும் உண்மையற்ற அல்லது தவறான வழியிலான அறிக்கைகள் அல்லது சான்றிதழ்கள் எதுவும் வழங்கப்படக் கூடாது.

கண்டுபிடிப்புகள் மற்றும் முடிவுகள் அனைத்தும் துல்லியமாக ஆவணப்படுத்தப்பட வேண்டும் மற்றும் அவை தவறான முறையில் மாற்றப்படக் கூடாது. SGS ஆல் வெளியிடப்படுகின்ற கண்டுபிடிப்புகளும் கருத்துக்களும் சம்பந்தப்பட்ட SGS குழுமக் கொள்கைகளுக்கிணங்க பராமரிக்கப்படுகின்ற உண்மையான மற்றும் துல்லியமான பணிக் கோப்புகள் மற்றும் செயல்பாட்டு அறிக்கைகள் மூலம் ஆதரிக்கப்படுகின்றன.

# நிதிப் பதிவேடுகளின் நேர்மை

நிதிப் பதிவேடுகளில் பதிவு செய்யப்படுகின்ற தகவல்கள் உண்மையானதாகவும், நியாயமானதாகவும், உரிய நேரத்தில் பதிவு செய்யப்பட்டவையாகவும், துல்லியமானதாகவும் இருக்க வேண்டும். எல்லாப் பரிவர்த்தனைகளும் முறையாகவும் துல்லியமாகவும் பதிவு செய்யப்பட வேண்டும். மற்றும், புத்தகப் பதிவேடுகள் நம்பகமான தரப்பால் வழங்கப்பட்ட முறையான ஆவணத்தால் ஆதரிக்கப்பட வேண்டும்.

எல்லாப் பதிவேடுகளும் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் SGS குழுமக் கொள்கைகளுக்கு இணங்க பாதுகாக்கப்பட வேண்டும்.

# கருத்து முரண்பாடுகள்

### கருத்து முரண்பாடுகள்: பொதுவாக

கருத்து முரண்பாடுகள், அல்லது கருத்து முரண்பாடுகள் ஏற்படுவதற்குச் சாத்தியமான சூழ்நிலை தவிர்க்கப்பட வேண்டும். தங்களுடைய தனிப்பட்ட நலன்கள் அல்லது தங்களது நெருங்கிய உறவினர்களின் அல்லது நெருங்கிய நண்பர்களின் தனிப்பட்ட நலன்கள் SGS இன் நலன்களுடன் முரண்படுவதற்குச் சாத்தியமிருக்கலாம் என்பது தெரியவந்தவுடன், SGS ஊழியர்கள் அதைப் பற்றி தங்களுடைய வரிசை மேலாளருக்கு (அல்லது SGS தலைமை இணக்க அதிகாரிக்கு) தெரிவிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு ஊழியரின் தனிப்பட்ட இலாபத்துக்கான வாய்ப்பு அவரது மதிப்பீடு, பாரபட்சமின்மை, சுதந்திரம் அல்லது SGS க்கு உள்ள விசுவாசம் ஆகியவற்றுடன் குறுக்கிடும்போது ஒரு கருத்து முரண்பாடு ஏற்படுகின்றது.

ஒரு SGS ஊழியரின் நெருங்கிய உறவினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்கள் SGS உடன் முரண்படுகின்ற ஒரு செயல்பாட்டையோ அல்லது ஒரு கருத்தையோ கொண்டிருக்கும்போதும் இது பொருந்துகின்றது.

கருத்து முரண்பாடு பல வழிகளில் ஏற்படக்கூடும். சந்தேகம் இருந்தால், ஊழியர்கள் வழிகாட்டுதல் கோர வேண்டும்.

அத்தகைய சாத்தியமுள்ள கருத்து முரண்பாடுகள் எல்லாவற்றையும் ஊழியர்கள் உடனடியாக தங்களுடைய மேலாளரிடம் தெரிவித்து, சாத்தியமுள்ள கருத்து முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற காலம் வரை முடிவெடுக்கும் செயல்முறையிலிருந்து அவர்கள் விலகியிருக்க வேண்டும்.

### நெருங்கிய உறவினர்கள்: வரையறை

ஒரு ஊழியரின் நெருங்கிய உறவினர்களில் இவர்கள் உள்ளடங்குவார்கள்: கணவர்/மனைவி அல்லது வாழ்க்கைத் துணைவர்; குழந்தைகள், பேரக்குழந்தைகள்; பெற்றோர்கள் மற்றும் தாத்தா-பாட்டிகள், உடன்பிறந்தவர்கள்; வாழ்க்கைத் துணைவரின் உடன்பிறந்தவர்கள்; மருமகன் மற்றும் மருமகள்; மற்றும் ஊழியருடன் வசிக்கின்ற நபர்கள். பொருத்தமானபோது, SGS இணைநிறுவனங்கள் உள்ளூர் பழக்கவழக்கங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு மற்ற உறவினர்களை இந்தப் பட்டியலில் சேர்த்து இந்தப் பட்டியலை நீட்டித்து ஒரு உள்ளூர் கொள்கையை வெளியிடலாம்.

### முன் அனுமதி தேவைப்படுகிறது

SGS ஊழியர்கள் எதிர்கொள்கின்ற சில செயல்திறமிக்க கருத்து முரண்பாடுகளை SGS ஆல் வழங்கப்படுகின்ற முன் அனுமதி மற்றும் பொருத்தமான தடைநீக்கம் மூலம் தீர்க்க முடியும்.

இவற்றில் உள்ளடங்குவன:

### SGS க்கு வெளியே இயக்குநரகம்

SGS க்கு வெளியே உள்ள ஒரு நிறுவனத்தின் இயக்குநர்கள் வாரியத்தில் பணிபுரிதல், ஒரு தொழில்முறை அல்லது வர்த்தக சங்கத்தின் வாரியத்தில் பணிபுரிதல் அல்லது உள்ளூர் அல்லது தேசிய அளவில் ஒரு அரசியல் நியமனத்தை அனுமானித்தல் ஆகியவற்றுக்கு SGS முதன்மை இணக்க அதிகாரியின் முன் அனுமதி தேவைப்படுகிறது (செயல்பாடுகள் குழுவின் உறுப்பினர்களுக்கு தொழில் நடத்தைக் குழுவின் முன் அனுமதி தேவைப்படுகிறது).

### SGS க்கு வெளியே பணிபுரிதல்

SGS க்கு வெளியே ஒரு இரண்டாவது வேலை அல்லது பணிவாய்ப்பை ஏற்பதற்கு இணைநிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் மண்டல மனிதவள மேலாளரின் எழுத்துப்பூர்வ முன் அனுமதி தேவை. இருப்பினும், பின்வரும் சூழ்நிலைகள் அனுமதிக்கப்படுவதில்லை: (i) ஊழியர் SGS நிறுவனத்தில் பணிபுரியும் காலத்தின்போது மேற்கொள்ளும் சேவைகளுக்காக SGS இன் வாடிக்கையாளர்களுக்காகப் பணிபுரிதல்; (ii) SGS இன் போட்டி நிறுவனத்துக்காகப் பணிபுரிதல்; அல்லது (iii) SGS க்கு பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குகின்ற நிறுவனத்துக்காகப் பணிபுரிதல்.

### நெருங்கிய உறவினர்களைப் பணியமர்த்துதல்

தற்போது SGS இல் பணிபுரிகின்ற ஒரு ஊழியரின் நெருங்கிய உறவினர் ஒருவரைப் பணியமர்த்துவதற்கு இணைநிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் மண்டல மனிதவள மேலாளரின் எழுத்துப்பூர்வ முன் அனுமதி தேவை. அதோடு, செயல்பாட்டுக் குழு உறுப்பினர்களின் நெருங்கிய உறவினர்கள், அல்லது ஒரு SGS இணைநிறுவனம் மற்றும் அவர்களது நேரடி அறிக்கைகளின் வாயிலாகப் பணியமர்த்துவதற்கு SGS தலைமை இணக்க அதிகாரியின் எழுத்துப்பூர்வ முன் அனுமதி தேவைப்படுகிறது.

எந்தச் சூழ்நிலையிலும், ஒரு நெருங்கிய உறவினரைப் பணியமர்த்துவதற்கோ, மேற்பார்வை செய்வதற்கோ அல்லது பணிநியமனத்துக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் செல்வாக்குச் செலுத்துவதற்கோ ஒரு SGS ஊழியர் அனுமதிக்கப்படுவதில்லை.

### அனுமதிக்கப்படுவதில்லை

சில கருத்து முரண்பாட்டுச் சூழ்நிலைகள் SGS ஊழியர்களிடம் தடை செய்யப்பட்டுள்ளன. இவற்றில் உள்ளடங்குவன:

சுய-வாணிகம்

- SGS இன் தற்போதைய வாடிக்கையாளர் அல்லது வருங்கால வாடிக்கையாளருக்கு ஏதாவது ஒரு வடிவத்தில் தொழில்முறை அல்லது ஆலோசனைச் சேவைகளை தனிப்பட்ட முறையில் வழங்குவது அல்லது அதில் பங்கேற்பது.
- SGS உடன் போட்டியிடுவது அல்லது SGS இன் போட்டி நிறுவனத்துக்காகப் பணிபுரிவது.
- SGS க்குள் ஒரு பதவியைத் தவறாகப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது SGS தகவல்களை அணுகுவதன் மூலம் தனிப்பட்ட இலாபம் பெறுவது, அல்லது நெருங்கிய உறவினர் ஒருவருக்கு தனிப்பட்ட இலாபத்தைப் பெற்றுத்தருவது.

சப்ளையர்கள், போட்டியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களில் தனிப்பட்ட முதலீடுகள்

- ஊழியரோ அல்லது அவருடைய நெருங்கிய உறவினரோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கணிசமான பங்கு அல்லது இதர நிதிப் பலன்களைப் பெற்றுள்ள SGS இன் சப்ளையர் அல்லது துணை ஒப்பந்ததாரர்களின் சேவைகளில் தெரிந்தே ஈடுபடுவது பின்வருவனவற்றைத் தவிர மற்ற சூழ்நிலைகளில் அனுமதிக்கப்படுவதில்லை: (i) சாத்தியமுள்ள முரண்பாடு குறித்து ஊழியரின் வரிசை மேலாளரிடம் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது மற்றும் (ii) முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள ஊழியர் கொள்முதல் செயல்முறையில் பங்கேற்பதில்லை.
- பகிரங்கமாக வர்த்தகம் செய்யப்படும் பங்குச் சந்தையின் மூலம் பங்குகள் வாங்கப்படாவிட்டால், ஒரு சப்ளையரிடம், துணை ஒப்பந்ததாரரிடம், போட்டியாளரிடம் அல்லது SGS இன் வாடிக்கையாளரிடம் தனிப்பட்ட முறையில் முதலீடு செய்வது அனுமதிக்கப்படுவதில்லை.

# நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் வளங்களைப் பயன்படுத்துதல்

### நிறுவனத்தின் சொத்துக்களையும் நிதிகளையும் பாதுகாக்கவும்

SGS ஊழியர்கள் தங்களது கட்டிப்பாட்டின் கீழ் உள்ள நிறுவனச் சொத்துக்களையும் நிதிகளையும் உரிய முறையில் பாதுகாக்கின்ற மற்றும் பயன்படுத்துகின்ற கடமையைக் கொண்டுள்ளனர். SGS சொத்துக்களை அல்லது வளங்களை எந்த வகையான தனிப்பட்ட நலனுக்காகப் பயன்படுத்துவதற்கு அல்லது ஒரு வெளித் தரப்புக்காக வேலை செய்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

### தகவல் தொழில்நுட்ப வளங்களைப் பயன்படுத்துதல்

நிறுவனத்தின் கணினிகள், நெட்வொர்க் அமைப்புகள் மற்றும் மின்னணு தகவல்தொடர்புக் கருவிகள் ஆகியவை SGS கொள்கைகளுக்கிணங்க தொழில் நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக சந்தேகம் எழும் பட்சத்தில் மின்னஞ்சல், இணையதளம் அல்லது இதர மின்னணு தகவல்தொடர்பு முறைகள் SGS ஆல் கண்காணிக்கப்படலாம் மற்றும் தணிக்கை செய்யப்படலாம் (சம்பந்தப்பட்ட தனியுரிமைச் சட்டங்களின் கீழ் அனுமதிக்கப்படும்போது).

### கொள்முதல்

சப்ளையர்களிடமிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்முதல் செய்கின்ற அல்லது துணை ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுக்கின்ற பொறுப்பிலுள்ள SGS ஊழியர்கள் சப்ளையரின் தரம் மற்றும் நற்பெயர் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு, அத்தகைய சேவைகளுக்கு மிகச் சிறந்த ஒட்டுமொத்த மதிப்பைப் பெற வேண்டும் என்ற தனிப்பட்ட நோக்கத்துடன் அதைச் செய்ய வேண்டும். பொருத்தமான போது, ஒரு சப்ளையரையோ அல்லது துணை-ஒப்பந்ததாரரையோ தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் போட்டிச் சலுகைகள் கோரப்பட வேண்டும். SGS நிறுவனம் தனிப்பட்ட முன்னுரிமைகளின் அடிப்படையில் சப்ளையர்களுக்கு ஒப்பந்தங்களை வழங்குவதில்லை. SGS க்கு சேவைகளை வழங்குவதாகத் தெரிவித்து ஒரு சப்ளையரிடமிருந்து அல்லது ஒரு நபரிடமிருந்து தனிப்பட்ட நன்மைகளை எந்த வடிவத்திலும் வணிக உபசாரத்தொகை பெறுவது கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

# லஞ்சம் மற்றும் ஊழல்

### லஞ்சம் மற்றும் ஊழல்

SGS தான் செயல்படுகின்ற எந்த நாடுகளிலும், எந்த வடிவத்திலும் லஞ்சம் அல்லது ஊழலில் ஈடுபடுவதில்லை. ஊழியர்கள், அல்லது SGS-இன் சார்பாகச் செயல்படுகின்ற மற்றவர்கள், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசாங்க அதிகாரிகளுக்கு பணமோ அல்லது சலுகையோ கொடுக்கக்கூடாது, அல்லது அவர்களுடைய முடிவில் ஆதிக்கம் செலுத்தும் நோக்கத்துடனோ அல்லது SGS க்கு முறையற்ற நன்மையைப் பெற்றுத் தருவதற்கு அவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடனோ, அன்பளிப்பு அல்லது உபசாரம் எதையும் அவர்களுக்கு வழங்கக்கூடாது. இது தனியார் நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு சம அளவில் பொருந்துகிறது.

லஞ்சம் கொடுக்குமாறு ஒரு SGS ஊழியரிடம் கேட்கப்பட்டால் அவர் அந்த விஷயத்தை உடனடியாக தனது வரிசை மேலாளர் மற்றும் / அல்லது SGS தலைமை இணக்க அதிகாரியிடம் தெரிவிக்க வேண்டும்.

### வணிகத்துக்காக பணம் எதுவும் கொடுக்கக்கூடாது

SGS க்கு வணிகத்தைப் பெறும் நோக்கத்துக்காக எந்த வடிவத்திலும் தவறான ஊக்கத்தொகை எதையும் SGS வழங்குவதில்லை.

### இடைத்தரகர்கள் மற்றும் ஆலோசகர்கள்

லஞ்சம் வழங்குவதற்கோ, சட்டவிரோதமான கமிஷன் அல்லது தனது சார்பாக உபகாரப் பணம் வழங்குவதற்கோ மூன்றாம் தரப்புச் சேவைகளை SGS ஈடுபடுத்துவதில்லை.

இடைத்தரகர்கள், முகவர்கள், ஆலோசகர்கள், கூட்டாளிகள், கூட்டுமுயற்சிக் கூட்டாளர்கள் அல்லது ஒப்பந்ததாரர்கள் ஆகியோர் லஞ்சம் அல்லது வேறு ஏதாவது சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும் என்ற சந்தேகம் ஏற்படுகின்ற நிகழ்வுகளில் அத்தகைய கூட்டாளர்களின் சேவைகளை SGS பயன்படுத்துவதில்லை. இடைத்தரகர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளம் அவர்கள் வழங்குகின்ற சேவைக்குப் பொருத்தமானதாக இருக்கின்றதா என்பதையும் அவர்களுடைய தகுதியையும் மதிப்பிடுவதற்கு முறையான விடாமுயற்சிச் செயல்முறை மேற்கொள்ளப்படாவிட்டால் தவிர, இடைத்தரகர்கள் அல்லது விற்பனை முகவர்கள் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள். இடைத்தரகர்களைப் பணியமர்த்துவதற்கான கோரிக்கை SGS செயல்பாட்டுக் குழுவின் உறுப்பினர் ஒருவரால் ஆதரிக்கப்பட வேண்டும் மற்றும் SGS தொழில் நடத்தைக் குழுவால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இடைத்தரகர்களுக்கு இந்த விதித்தொகுப்பின் ஒரு நகல் வழங்கப்பட வேண்டும், அது கையொப்பமிட்டு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். மேலும் அவர்கள் SGS உடனான தங்களுடைய உறவின் அனைத்து அம்சங்களிலும் அதன் கொள்கைகளைக் கடைப்பிடித்துப் பணிபுரிய ஒப்புக்கொள்ள வேண்டும். ஒரு இடைத்தரகரின் பயன்பாட்டை நிர்வகிக்கின்ற SGS ஊழியர்கள் அவர்கள் விதித்தொக்குப்புக்கு இணங்கச் செயல்படுகிறார்களா என்பதை வழக்கமாகக் கண்காணிக்கும் பொறுப்புக் கொண்டிருக்கிறார்கள்.

### உபசாரக் கொடுப்பனவுகள்

உபசாரக் கொடுப்பனவுகள் என்பவை ஒரு கீழ்நிலை அரசாங்க அதிகாரியின் செயல்திறனை விரைவுபடுத்துவதற்காக அல்லது எளிதாக்குவதற்காக ஒரு முறை கொடுக்கப்படுகின்ற ஒரு கணிசமான தொகை ஆகும், அவ்வாறு கொடுப்பதற்கு SGS சட்டரீதியான உரிமை பெற்றுள்ளது. உபசாரக் கொடுப்பனவுகளுக்கு அதிகாரிகளிடமிருந்து பெறப்படுகின்ற கோரிக்கைகள் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டும், மேலும் அவ்வாறு மறுப்பது ஊழியர்களின் நலனுக்குத் தீங்கு விளைவிக்கும் சூழ்நிலையிலோ அல்லது SGS வணிகத்துக்கு குறிப்பிடத்தக்க அபாயம் ஏற்படுத்தக்கூடும் என்ற சூழ்நிலையிலோ மட்டுமே கொடுக்கப்பட வேண்டும்.

### அறிக்கையளித்தல் மற்றும் கணக்குப்பதிவு

உபசாரக் கொடுப்பனவு செலுத்தப்படுகின்ற அரிதான சூழ்நிலைகளில், அத்தகைய கொடுப்பனவைச் செலுத்துகின்ற அல்லது அங்கீகரிக்கின்ற ஊழியர் அத்தகைய கொடுப்பனவை ஏன் தவிர்க்க இயலவில்லை என்பதற்கான காரணம், செலுத்தப்பட்ட தொகை, தேதி மற்றும் பணம் பெற்றவர் ஆகிய விவரங்களை எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க வேண்டும்.

உபசாரக் கொடுப்பனவுகள் அவை தணிக்கை செய்யப்படுவதற்கு உதவும் வகையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். உள்ளூர் நடைமுறைகள் மற்றும் சட்டத்தின் அடிப்படையில், SGS இணை நிறுவனங்கள் மிக விரிவான கட்டுப்பாட்டு விதிகளை நடைமுறைப்படுத்த முடியும் அல்லது அத்தகைய உபசாரக் கொடுப்பனவுகளைச் செலுத்தாமல் ஊழியர்களுக்குத் தடைவிதிக்க முடியும்.

**லஞ்சம் கொடுக்க மறுத்ததற்காக பாதக விளைவுகள் ஏதுமில்லை**

லஞ்சம் கொடுக்க மறுத்ததற்காகவோ, ஊழல் நடைமுறைகளில் ஈடுபட மறுத்ததற்காகவோ அல்லது உபசாரக் கொடுப்பனவு கொடுக்க மறுத்ததற்காகவோ எந்த ஒரு SGS ஊழியரும் தண்டிக்கப்பட மாட்டார்.

# அரசியல் நன்கொடைகள் மற்றும் அறப் பங்களிப்புகள்

### அரசியல் அல்லது மத ரீதியான நன்கொடைகள் தரக்கூடாது

SGS தான் செயல்படுகின்ற எல்லா நாடுகளிலும் அரசியல் நடவடிக்கைகளில் நடுநிலைமையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்ற கண்டிப்பான கொள்கையைக் கடைப்பிடிக்கிறது. எந்த நாட்டிலும் ஏதாவது அரசியல் கட்சிக்கோ, பொது அலுவலகத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிக்கோ அல்லது உறுப்பினருக்கோ SGS நிதியையோ அல்லது வளங்களோயோ கொடுப்பதில்லை, மற்றும் அரசியல் பிரச்சாரம் எதையும் ஆதரிப்பதில்லை. எந்த மத அமைப்புக்கும் SGS ஆதரவு வழங்குவதில்லை.

### அறச்செயல் பங்களிப்புகள்

தொண்டு நிறுவனங்களுக்கு SGS மூலம் நன்கொடைகள் வழங்குவது அல்லது SGS செயல்படுகின்ற சமுதாயங்களில் இலாப நோக்கற்ற திட்டங்களில் (ஒரு இயற்கைப் பேரழிவைத் தொடர்ந்து அவசரகால நிவாரண முயற்சிகளில் உதவி செய்வது, கல்வி, உடல்நலப் பராமரிப்பு, ஆராய்ச்சி அல்லது இலாப நோக்கற்ற முதலீடுகள் ஆகியவற்றுக்கு நிதியுதவியளிப்பது ஆகியவை உட்பட) அதன் மூலம் நேரடியாக முதலீடு செய்வது ஆகியவற்றுக்கு சம்பந்தப்பட்ட மண்டலத்துக்குப் பொறுப்புடைய SGS தலைமை இயக்க அதிகாரியின் எழுத்துப்பூர்வ முன் அனுமதி தேவைப்படுகிறது. CHF 10,000 க்கும் அதிகமான அறச்செயல் பங்களிப்புகளுக்கு SGS தொழில்முறை நடத்தைக் குழுவின் முன் அனுமதி தேவைப்படுகிறது.

எந்த வடிவிலான அறச்செயல் பங்களிப்புகளுக்கும், SGS க்கு முறையற்ற நன்மைகளை வழங்குவதற்காக அவை அரசாங்க அதிகாரிகளிடம் அல்லது மூன்றாம் தரப்பிடம் செல்வாக்குச் செலுத்துகின்ற நோக்கம் கொண்டிருந்தாலோ அல்லது அவ்வாறு தோன்றினாலோ அவற்றுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

# ன்பளிப்புகள் மற்றும் உபசரிப்புகள்

### பொதுக் கொள்கைகள்

அன்பளிப்புகள், உபசரிப்புகள் அல்லது விருந்தோம்பல் ஆகியவை முறையற்ற வகையில் செல்வாக்குச் செலுத்துவதாக இருந்தாலோ அல்லது வணிக முடிவுகளில் முறையற்ற செல்வாக்குச் செலுத்துவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தினாலோ அவற்றை வழங்கவோ அல்லது ஏற்கவோ கூடாது.

அன்பளிப்புகள், உபசரிப்புகள் அல்லது விருந்தோம்பல் ஆகியவை சாதாரண வணிக உறவுகளில் வழக்கமாக மேற்கொள்வதை விட மீறுவதாக இருக்கக் கூடாது. SGS இன் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கக்கூடிய உபசரிப்புகள் எந்த வடிவத்தில் இருந்தாலும் அவை தவிர்க்கப்பட வேண்டும். SGS ஊழியர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்ற நடத்தைத் தரத்தை பின்வரும் விதிகள் தெளிவுபடுத்துகின்றன.

இணை நிறுவனங்கள் உள்ளூர் நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு அவர்களுடைய ஊழியர்களுக்கு மிக விரிவான மற்றும் கட்டுப்படுத்தக்கூடிய கொள்கைகளைப் புகுத்தலாம்.

SGS ஊழியர்களுக்கு வழங்கப்படும் அன்பளிப்புகள்

SGS ஊழியர்கள் இவற்றை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக்கூடாது:

- சப்ளையர்களிடமிருந்து அல்லது வாடிக்கையாளர்களிடமிருந்து ரொக்கப் பணம், சிறு நன்கொடை, கடன்கள் அல்லது பணத்துக்குத் தகுந்த மதிப்புடைய அன்பளிப்புகள்.
- SGS மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சேவை தொடர்பாக வழங்கப்படுகின்ற ஏதாவது தனிப்பட்ட அன்பளிப்புகள், சலுகைகள், உபசரிப்பு அல்லது விருந்தோம்பல்.
- கொள்முதல் முடிவுகள் அல்லது சப்ளையர்களைத் தேர்ந்தெடுப்பது ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் சப்ளையர்களால் அல்லது வருங்கால சப்ளையர்களால் வழங்கப்படுகின்ற தனிப்பட்ட அன்பளிப்புகளை ஏற்கக் கூடாது. சப்ளையர்களின் நிதியாதரவுடன் நடத்தப்படுகின்ற வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் அதனையொத்த தொழில் நிகழ்ச்சிகளில் பங்கேற்பது உள்ளிட்ட வழக்கமான விருந்தோம்பல் மற்றும் உபசாரம் ஆகியவை அறிக்கையளித்தல் மற்றும் அனுமதிப் பொறுப்புகளுக்குட்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

### அறிக்கையளித்தல் மற்றும் அனுமதிப் பொறுப்புகள்

CHF 100க்கு மேற்பட்ட மதிப்புடைய எந்த அன்பளிப்பையும் ஏற்பதற்கு முன்னர் ஊழியர்கள் SGS இணைநிறுவனத்தின் நிர்வாக இயக்குநருக்குத் தெரிவித்து அவரது முன் அனுமதி பெற வேண்டும். CHF 500 க்கு மேற்பட்ட மதிப்புடைய அன்பளிப்புகளுக்கு, SGS தலைமை இணக்க அதிகாரியின் அனுமதி கட்டாயமாகப் பெறப்பட வேண்டும்.

ஏற்கப்பட்ட அன்பளிப்புகளை மறுக்க முடியவில்லை என்றாலோ அல்லது அவமதிக்காமல் திருப்பி அனுப்ப முடியவில்லை என்றாலோ அன்பளிப்பு பெறுகின்ற நபர் அதை அகற்றுவதற்கு ஒரு பொருத்தமான முறையை, உதாரணமாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அறக்கட்டளை அதை நன்கொடையாக வழங்குவது போன்ற முறையை, தேர்ந்தெடுக்க வேண்டும்.

### SGS மூலம் வணிக உறவுகளுக்கு வழங்கப்படும் அன்பளிப்புகள்

வாடிக்கையாளர்களுக்கு அல்லது வணிக உறவுகளுக்கு SGS மூலம் வழங்கப்படுகின்ற அன்பளிப்புகளுக்கு, CHF 100க்கு மேற்பட்ட மதிப்புடைய அன்பளிப்புக்கு SGS இணைநிறுவனத்தின் நிர்வாக இயக்குநரின் முன் அனுமதியும், CHF 500 க்கு மேற்பட்ட மதிப்புடைய அன்பளிப்புகளுக்கு SGS தலைமை இணக்க அதிகாரியின் முன் அனுமதியும் பெறப்பட வேண்டும்.

SGS நிதியாதரவுடன் நடத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளுக்காக, அல்லது ஒரு SGS செயல்பாட்டைப் பார்வையிடும் நோக்கத்துக்காக அரசாங்க அதிகாரிகள் அல்லது வணிகக் கூட்டாளர்களின் பயணம் மற்றும் தங்கும் அறைக்குக் கட்டணம் செலுத்துவது ஆகியவற்றுக்கு செயல்பாட்டுக் குழுவின் இரண்டு உறுப்பினர்களிடம் (முக்கியமாக ஒரு COO மற்றும் ஒரு EVP யிடம்) முன் அனுமதி பெறப்பட வேண்டும். அத்தகைய பயணம் மற்றும் தங்கும் அறைக்கான கட்டணம் CHF 10,000 ஐ விட அதிக மதிப்புடையதாக இருந்தால், SGS தலைமை இணக்க அதிகாரியின் அனுமதி தேவைப்படுகிறது.

# நியாயமான போட்டி

SGS ஆனது போட்டிக்குரிய மற்றும் நியாயமான சந்தை நடைமுறைகளைப் பயன்படுத்தி தனது வணிகத்தை நடத்துகிறது. அது தான் செயல்படுகின்ற சந்தைப்பகுதிகளில் ஒருபுறச் சார்பை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவோ அல்லது தவறான முறையில் செல்வாக்குச் செலுத்தவேண்டும் என்பதற்காகவோ போட்டியாளர்களுடன் புரிதலை அல்லது ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளும் செயல்களில் ஈடுபடுவதில்லை.

குறிப்பாக, விலை நிர்ணயம், ஒப்பந்த விதிமுறைகள், சந்தை ஒதுக்கீடுகள், பிரதேசங்கள் அல்லது வாடிக்கையாளர்களைப் பிரித்தல் ஆகியவை தொடர்பான விவாதங்களில் SGS ஈடுபடுவதில்லை. போட்டிக்குரிய விலைக்குறிப்புச் செயல்முறைகள் குறித்து போட்டியாளர்களுடன் SGS விவாதிப்பதில்லை.

ஏமாற்றுகின்ற அல்லது தவறான வழிகளில் SGS தனது சேவைகளை அல்லது திறன்களை சந்தைப்படுத்துவதில்லை, மற்றும் போட்டியாளர்கள் தொடர்பாக பழித்துரைக்கின்ற அல்லது பொய்யான குற்றச்சாட்டுகளைத் தெரிவிப்பதில்லை.

சட்டவிரோத அல்லது ஒழுக்கநெறியற்ற வழிகளைப் பயன்படுத்தி போட்டியாளர்கள் குறித்த இரகசியத் தகவல்களை SGS பெறுவதில்லை.

போட்டியை ஒழுங்குபடுத்தும் சட்டங்கள் சிக்கலானவை. அவை ஒவ்வொரு சட்ட எல்லைக்கும் மாறுபடுகின்றன. SGS சட்டப் பிரிவின் ஆலோசனை கோரப்பட வேண்டும்.

# ஊழியர் உறவுகள்

### பாகுபாடு இல்லை

அனைத்து SGS ஊழியர்களும் அவர்களுடைய வேலை தொடர்பான திறன்கள், தகுதிகள், நடத்தை மற்றும் செயல்திறனைப் பொறுத்து தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

ஆனது, இனம், நிறம், பாலினம், மதம், அரசியல் ஈடுபாடு, சங்க உறுப்பாண்மை, தேசியம், பாலியல் நிலைப்பாடு, சமூகம், வயது அல்லது இயலாமை ஆகிய எவற்றையும் கருத்தில் கொள்ளாமல், சம வாய்ப்புக் கொள்கையின் அடிப்படையில் ஊழியர் உறவுகளின் அனைத்து அம்சங்களையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த தகுதிவரன்முறைகளின் அடிப்படையிலான பாகுபாடுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

### கொடுமைப்படுத்தல் மற்றும் பாலியல் துன்புறுத்தல்

துஷ்பிரயோகம், துன்புறுத்தல் மற்றும் கொடுமைப்படுத்தல் ஆகியவை எந்த வடிவத்தில் இருந்தாலும் அவை தடை செய்யப்பட்டுள்ளன. விரும்பத்தகாத பாலியல் நடத்தைகள், பாலியல் ஆதாயங்களுக்கான கோரிக்கைகள் அல்லது பொருத்தமற்ற உடல் தொடர்பு ஆகியவை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. எல்லா ஊழியர்களும் தங்களுடைய சக ஊழியர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஊழியர்கள் தங்களுடைய பணியாளர் உறுப்பினர்கள், சக ஊழியர்கள் மற்றும் நிர்வாகம் ஆகியோருடன் தொடர்புகொள்ளும்போது எல்லா நேரங்களிலும் உண்மையாகவும் மரியாதையாகவும் இருக்க வேண்டும்.

இது வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள், அவர்களுடைய ஊழியர்கள் மற்றும் நிர்வாகம் ஆகியோருக்கும் பொருந்தும்.

### குழந்தைத் தொழிலாளர் அல்லது கட்டாயத் தொழிலாளருக்கான தடை

கட்டாயப் பள்ளி வயது பூர்த்தியாகத குழந்தைகளை, அல்லது எந்த நிகழ்விலும் 16 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை SGS பணியமர்த்துவதில்லை. அவ்வாறு பணியமர்த்தப்பட்டால், 16 முதல் 18 வயதுக்குட்பட்ட இளம் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய உடல்நலம், நலவாழ்வு, பாதுகாப்பு அல்லது கல்வி ஆகியவற்றுக்குத் தீங்கு விளைவிக்கின்ற எந்த ஒரு வேலையிருந்தும் பாதுகாப்பளிக்கப்படுகிறது.

அடிமைத்தனம், குழந்தைகளின் விற்பனை அல்லது கடத்தல், கடன் பிணையம் அல்லது கொத்தடிமைத்தனம், கட்டாய அல்லது வற்புறுத்தப்பட்ட தொழிலாளர் போன்றவற்றில் எந்த வடிவத்திலும் SGS ஈடுபடுவதில்லை.

எந்தச் சூழ்நிலையிலும், கட்டாயத் தொழிலாளர், பிணையத் தொழிலாளர் அல்லது சிறைத் தொழிலாளர்களை SGS பயன்படுத்துவதில்லை.

### சங்கம் அமைக்கும் சுதந்திரம்

வர்த்தகச் சங்கங்களை அமைப்பதற்கும் அவற்றில் சேர்வதற்கும், கூட்டுப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் ஊழியர்களுக்கு உள்ள உரிமையை SGS அங்கீகரிக்கிறது. சங்கம் அமைத்தல் அல்லது கூட்டுப் பேச்சுவார்த்தை ஆகியவை சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுகின்ற சூழ்நிலைகளில், SGS அதற்கு இணையான சுயாதீனமான மற்றும் சுதந்திரமான சங்கத்துக்கும் பேச்சுவார்த்தைக்கும் உதவி செய்கிறது. ஊழியர்களின் பிரதிநிதிகள் அவர்களுடைய பிரதிநிதித்துவச் செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு தேவையான நேரமும் வசதிகளும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

### சப்ளையர்கள் மற்றும் துணை ஒப்பந்ததாரர்கள் மூலம் இணக்கம்

கட்டாயத் தொழிலாளர் அல்லது குழந்தைத் தொழிலாளரைப் பயன்படுத்துகின்ற சப்ளையர்கள் அல்லது துணை ஒப்பந்ததாரர்களை SGS பயன்படுத்துவதில்லை, மற்றும் சப்ளையர்களும் துணை ஒப்பந்ததாரர்களும் இந்த நிபந்தனையைக் கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்த நியாயமான கடின உழைப்பையும் கண்காணிப்பையும் பயன்படுத்துகிறது.

## சுற்றுச்சூழல், உடல்நலம் மற்றும் பாதுகாப்பு

### சுற்றுச்சூழல்

SGS, இயற்கை வளங்களைத் திறமையாகப் பயன்படுத்துவதற்கு ஊக்கமளித்தல், மாசுபாட்டைக் குறைத்தலும் தடுத்தலும், மற்றும் தீங்கு விளைவிக்கும் பொருட்களின் வெளிப்பாடு மற்றும் பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வு ஆகியவற்றைக் குறைத்தலும் தடுத்தலும் ஆகியவற்றின் மூலம் தனது செயல்பாடுகளினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படுகின்ற தாக்கத்தைக் குறைக்க பெருமுயற்சி செய்கிறது.

### உடல்நலம் மற்றும் பாதுகாப்பு

ஊழியர்களுக்கு காயங்கள் மற்றும் தொழில் சார்ந்த உடல்நலக்குறைவுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு பாதுகாப்பான வேலைச் சூழ்நிலைகள், நிபந்தனைகள் மற்றும் உபகரணம் ஆகியவை உரிய இடத்தில் தகுந்த நடவடிக்கைகளுடன் வழங்கப்பட வேண்டும்.

SGS கொள்கைகள் அல்லது சம்பந்தப்பட்ட சட்டங்களுக்கு இணங்க, SGS ஊழியர்கள் வேலை தொடர்பான விபத்து அல்லது மாசுபாட்டுச் சம்பவம் ஏதாவது இருந்தால் அதைப்பற்றித் தெரிவிக்க வேண்டும் மற்றும் பதிவு செய்ய வேண்டுமென எதிர்பாக்கப்படுகிறது. விபத்து அல்லது மாசுபாட்டுச் சம்பவம் பற்றித் தெரிவிக்கின்ற ஊழியர் யாரும் தண்டிக்கப்பட மாட்டார்கள்.

## இரகசியத்தன்மை

வணிகம் நடைபெறும்போது வாடிக்கையாளர்கள் அல்லது மூன்றாம் தரப்பால் நம்பி ஒப்படைக்கப்படுகின்ற இரகசியத் தகவல்களுக்கு SGS மதிப்பளித்துப் பாதுகாக்கிறது மற்றும் எதிர்பாராத விதமாக அது வெளியாவதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறது.

SGS தனது ஊழியர்களின் தனிப்பட்ட தகவல்களின் தனியுரிமைக்கும் இரகசியத்தன்மைக்கும் மதிப்பளிக்கிறது. SGS ஆனது தனது வணிகம் பயனளிக்கும் விதமாகச் செயல்படுவதற்குத் தேவைப்படுகின்ற அளவுக்கு அல்லது சட்டத் தேவைகளைக் கடைப்பிடிக்கத் தேவைப்படுகின்ற அளவுக்கு மட்டுமே ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்களின் தனிப்பட்ட தரவுகளைப் பெற்றுப் பராமரிக்கிறது. சட்டரீதியான வணிக நோக்கம் இருந்தால் தவிர, தனிப்பட்ட அல்லது இரகசியத் தகவல்களுக்கான அணுகலை எந்த ஊழியரும் கோரக்கூடாது.

ஊழியர்கள் SGS தகவல்கள் மற்றும் சக ஊழியர்களின் தனிப்பட்ட தரவுகளின் இரகசியத்தன்மையைப் பாதுகாக்க வேண்டும். மேலும், SGS இன் நிதி சார்ந்த செயல்பாடு, முதலீடு, உத்திகள், திட்டங்கள் அல்லது வாடிக்கையாளர்கள் தொடர்பான எந்த உணர்ச்சிப்பூர்வத் தகவல்களையும் வெளியிடவோ அல்லது விவாதிக்கவோ கூடாது. இந்தக் கடமைப்பொறுப்பு வேலை உறவு முடிந்த பின்னரும் கூட தொடரவேண்டும்.

## அறிவுசார் சொத்து

SGS தனது அறிவுசார் சொத்தை பாதுகாக்கிறது. மேலும், மற்றவர்களின் அறிவுசார் சொத்துக்கும் மதிப்பளிக்கிறது.

SGS தனது ஊழியர்களின் வேலை மற்றும் புத்துருவாக்கத் திறன் ஆகியவற்றின் வாயிலாக, மதிப்புமிக்க யோசனைகள், சேவைகள், வணிகச் செயல்முறைகள் மற்றும் உத்திகள் ஆகியவற்றை உருவாக்குகிறது. இந்த அறிவுசார் சொத்து போட்டிசார்ந்த நன்மையை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது மற்றும் விளம்பரப்படுத்தல் மற்றும் தவறான பயன்பாடு ஆகியவற்றிலிருந்து இது பாதுகாக்கப்பட வேண்டும்.

SGS-ன் அறிவுசார் சொத்து பல வடிவங்களில் இருக்கலாம். செயல்முறைகள், வடிவமைப்புகள், முறைகள், செயலாக்க நடைமுறைகள், வர்த்தக மற்றும் சந்தைப்படுத்தல் உத்திகள், வாடிக்கையாளர்களின் தகவல், விலை நிர்ணயம் மற்றும் மாதிரிகள் வார்த்தல் ஆகியவை இதில் உள்ளடங்கும். ஊழியர்கள் இந்த அறிவுசார் சொத்துக்களை அவற்றின் திட்டமிடப்பட்ட நோக்கத்தைத் தவிர வேறு எதற்காகவும் பகிரங்கப்படுத்தவோ, நகலெடுக்கவோ அல்லது பயன்படுத்தவோ கூடாது.

வாடிக்கையாளர்களின் அறிவுசார் சொத்துக்கு உட்படுத்தப்படும்போது ஊழியர்கள் இதே அளவிலான கவனத்துடன் இருக்க வேண்டும்.

ஒரு மூன்றாம் தரப்பின் அறிவுசார் சொத்தினை SGS வேண்டுமென்றே மீறி நடப்பதில்லை. உரிமம் பெறாத மென்பொருளைப் பயன்படுத்துவது, அங்கீகாரமில்லாமல் பதிப்புரிமை பெற்ற பொருட்களைப் பயன்படுத்துவது அல்லது மீளுருவாக்கம் செய்வது அல்லது ஒரு செல்லத்தக்க காப்புரிமையை வேண்டுமென்றே மீறுவது ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன.

# வெளிப்புற தகவல்தொடர்பு

SGS ஒரு பொது வர்த்தக நிறுவனம் ஆகும் மற்றும் இது முதலீட்டாளர்கள் உரிய நேரத்தில் தகவலறிந்த முதலீட்டு முடிவுகளை எடுக்க உதவுவதை நோக்கமாகக் கொண்ட பகிரங்கப்படுத்தல் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாகும். SGS, தனது வணிகம் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக தனது பங்குதாரர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கும், சந்தைக்கும் சமுதாயத்துக்கும் உறுதியான, துல்லியமான, வெளிப்படையான மற்றும் தெளிவான தகவல்களை வழங்குகிறது. SGS, அதன் வணிகம் மற்றும் அதன் நிதிச் செயல்பாடு ஆகியவை தொடர்பாக பங்குதாரர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும், ஊடகங்களுக்கும், பொதுமக்களுக்கும் தெரிவிக்கப்படும் தகவல்கள் அங்கீகரிக்கப்பட்ட நபர் வாயிலாக மட்டுமே தெரிவிக்கப்பட வேண்டும்.

SGS சார்பாக எந்த ஊழியரும், SGS தொடர்பான எந்தத் தகவலையும் ஊடகங்களிடமோ, நிதி ஆய்வாளர்களிடமோ, தற்போதைய அல்லது வருங்கால முதலீட்டாளர்களிடமோ விவாதிக்கவோ அல்லது வெளியிடவோ கூடாது, அல்லது குறிப்பாக SGS இடமிருந்து அங்கீகாரம் பெறாவிட்டால் தவிர, SGS சார்பாக எந்தப் பொது அறிக்கையையும் வெளியிடக் கூடாது.

மதம் அல்லது அரசியல் தொடர்பான தனிப்பட்ட கருத்துக்கள், அல்லது ஆட்சேபனைக்குரிய வடிவிலுள்ள ஏதேனும் உள்ளடக்கம் ஆகியவற்றை SGS முகவரிக்கடிதத்திலோ, மின்னஞ்சல் அல்லது வேறு ஏதாவது வழியிலோ வெளிப்படுத்தக் கூடாது. அவ்வாறு வெளியிட்டால், அத்தகைய கருத்துக்கள் அல்லது பொருட்கள் SGS க்கு உரியதாகத் தோன்றும்.

விவாதக்களங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் பங்கேற்கும்போது, SGS ஊழியர்கள் நேர்மை விதித்தொகுப்புக்கும், SGS சமூக ஊடகக் கொள்கைக்கும் இணங்கி நடக்க வேண்டும்.

# உள்நபர் வணிகம்

SGS, அதன் வாடிக்கையாளர்கள் அல்லது சப்ளையர்கள் தொடர்பான பொதுவல்லாத தகவலின் அடிப்படையில், ஏதேனும் தனிப்பட்ட முதலீடு அல்லது வணிக வாய்ப்பினை ஊழியர்கள் பின்பற்றக் கூடாது.

பகிரங்கப்படுத்தப்பட்டால் SGS இன் பங்கு விலையில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற பொதுவல்லாத தகவல்களை வைத்திருக்கும்போது, SGS பங்குகள், விருப்பத்தெரிவுகள் மற்றும் SGS ஆல் வெளியிடப்பட்ட இதர பத்திரங்கள் ஆகியவற்றில் வர்த்தகம் செய்வதற்கு ஊழியர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பங்குச் சந்தை விதிமுறைகளுக்கிணங்க SGS மூலம் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படவில்லை எனில் அது பொதுவல்லாத தகவல் ஆகும்.

உள்நபர் தகவல் என்பது பொதுவாக, பொதுவல்லாத நிதி முடிவுகள், குழுமத்தின் வரைவு மூலோபாயத் திட்டங்கள் மற்றும் முதுநிலை மேலாண்மையில் திட்டமிடப்பட்ட மாற்றங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இந்த வகையில் இடம்பெறுகின்ற எந்தப் பரிவர்த்தனையையும் மேற்கொள்வதற்கு முன்னர் SGS சட்டப் பிரிவிடமிருந்து ஆலோசனை பெறப்பட வேண்டும்.

வணிகத்தில் ஈடுபட்டிருக்கும்போது, SGS சில நேரங்களில் வாடிக்கையாளர்கள் அல்லது மூன்றாம் தரப்பு தொடர்பாக முக்கியமான பொதுவல்லாத தகவல்களைப் பெறுகிறது. அத்தகைய இரகசியத் தகவல்களைத் தெரிந்திருக்கும் நிலையில் வாடிக்கையாளர்களின் அல்லது அத்தகைய மூன்றாம் தரப்பின் பங்குகளில் வர்த்தகம் செய்வதற்கு ஊழியர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

SGS இல் பணிபுரியும் நேரத்தில் பெறப்பட்ட உள்நபர் தகவல்களின் அடிப்படையில் அவ்வாறான எந்தத் தகவலையும் மற்றவருக்குத் தெரிவிப்பது அல்லது மூன்றாம் தரப்பினருக்கு அல்லது நெருங்கிய உறவினர்களுக்கு முதலீட்டுக் குறிப்புகளைக் கொடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

# சட்டங்களுக்கு இணங்கி நடத்தல்

SGS வணிகம் மேற்கொள்கின்ற நாடுகளில் பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு இணங்கி நடக்கிறது. SGS செயல்பாடுகளின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய சட்டம் சிக்கலானதாக இருக்கலாம். SGS க்கும், தனிநபர்களாக தங்களுக்கும் பொருந்துகின்ற விதிகளை ஊழியர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். சந்தேகம் இருந்தால், SGS சட்டப் பிரிவிடமிருந்து சட்ட ஆலோசனை பெறவேண்டும். சட்டத்தை அறியாமலிருப்பது மன்னிக்க முடியாததாகும்.

பொருந்தக்கூடிய சட்டங்களால் விதிக்கப்பட்டவற்றை விட இந்த விதித்தொகுப்பு அல்லது கொள்கைகள் மிகக் கடுமையான தரங்களைச் சுமத்தும்போது, ஊழியர்கள் கட்டாயமாக மிகக் கடுமையான தரங்களுக்கு இணங்கி நடக்க வேண்டும். இந்த விதித்தொகுப்புக்கும் பொருந்தக்கூடிய சட்டங்களுக்கும் இடையே ஏற்படும் முரண்பாடுகளுக்கு எப்படித் தீர்வு காண்பது என்ற சந்தேகம் எழும்போது, ஊழியர்கள் வழிகாட்டலை நாட வேண்டும்.

SGS வணிகத்தின்போது, SGS சம்பந்தமான விசாரணை தொடர்பாக ஒழுங்குமுறை முகமைகள் அல்லது அரசாங்க அதிகாரிகள் ஊழியர்களைத் தொடர்புகொள்ளக்கூடும். தகவல் அல்லது ஆவணப்படுத்தலுக்கு வழக்கத்தில் இல்லாத கோரிக்கைகள் எழுப்பப்படும் பட்சத்தில், SGS சட்ட ஆதாரங்களிடமிருந்து ஊழியர்கள் ஆலோசனை கோர வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும், SGS சார்பாகச் செயல்படுகின்ற யாரும், தவறாக வழிநடத்தக்கூடாது, ஆதாரத்தை மறைக்கக் கூடாது, ஆவணங்களை அழிக்கக்கூடாது அல்லது சட்டரீதியான எந்த விசாரணைக்கும் இடையூறு செய்யக்கூடாது.

# நடைமுறைப்படுத்தல்

இந்த நேர்மை விதித்தொகுப்பு SGS இன் செயல்பாட்டுக் குழு மற்றும் இயக்குநர்கள் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இயக்குநர்கள் வாரியத்தின் தொழில்சார் நடத்தைக் குழு விதிமீறல்கள் பற்றிய வழக்கமான அறிக்கைகளைப் பெற்று அது நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கிறது.

இந்த விதித்தொகுப்பு பிப்ரவரி 2012 முதல் நடைமுறைக்கு வருகிறது, முந்தைய 2004 பதிப்புக்கு பதிலாக இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

SGS இணைநிறுவனங்கள், SGS தலைமை இணக்க அதிகாரியிடம் எழுத்துப்பூர்வ முன் அனுமதி பெற்று, இந்த விதித்தொகுப்பில் உள்ளடங்கிய பகுதிகளில் மிக விரிவான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட கொள்கைகளை ஏற்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

# தொடர்புத் தகவல்கள்

**இணக்கத் தொடர்பு**
1 place des Alpes
P.O. Box 2152
CH – 1211 Geneva 1
தொலைபேசி+41 (0)22 739 91 00
தொலைபேசி +41 (0)22 739 98 81

integrityhelpline.sgs.com

www.sgs.com

நமது நேர்மை விதித்தொகுப்புக்கு தங்களது ஆக்கப்பூர்வமான பங்களிப்பை வழங்கியதற்காக ஊழியர்கள் மற்றும் பங்குதாரர்கள் அனைவருக்கும் சிறப்பு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

WWW.SGS.COM

© SGS Group Management SA – 2019 – All rights reserved - SGS is a registered trademark of SGS Group Management SA

WHEN YOU NEED TO BE SURE